திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாள், வெள்ளி கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள். 1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது நிதி 2019–20ன் கீழ் தலைமை நீர்ப்பணி நிலையத்தில் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள, தனி அலுவலர் மற்றும் ஆணையர் ஒப்புதல், நாள்.18.11.2019 அன்று பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.396/2019–20 வாயிலாக 06.12.2019 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரீசிலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விபரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்	குறிப்பு
1	2	3	4
தலைமை நீர்ப்பணி நிலையம்			
1	கம்பரசம்பேட்டை, தலைமை நீர்ப்பணி நிலையத்திற்கு கிருமினாசினி பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.21.25 இலட்சம்	1) M/s Vijay Enterprices, திருச்சி 0.09% குறைவு 2) M/s. S.R Chemical, திருச்சி 20.20% அதிகம்	வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **M/s Vijay Enterprices திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு 1பத்தி எண் 4ல் கண்டுள்ள விவரப்படியான குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதனை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

இ4/11000/2019(மையம்)
தீர்மானம் எண்.26 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.
பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண். 12க்குட்பட்ட நத்தர்ஷா பள்ளிவாசல் தர்காவில் சட்ட மன்ற உறுப்பினர் நிதியின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பழுது ஏற்பட்டு செயல்படாமல் உள்ளது. எனவே அப்பகுதிக்கு வரும் மக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளதால் பொதுமக்களின் அவசரம் அவசியம் கருதி இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளுவதற்கு ரூ.70,000/– மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.02 சதவீதம் குறைவான விலைவீதத்தில் , 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மெசர்ஸ். BSL ஏஜென்ஸீஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/218/2020(மையம்)

தீர்மானம் எண்.27 (பொருள்–2) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை – சீர்மிகு நகர திட்டம் 2018ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக அட்டவனையில் கண்டுள்ள வாகனங்கள் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தமது செயல்முறை உத்திரவு எண்.16679/2018/IJSDP-3, நாள்: 09.01.2020-ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளார்.

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு (ரூ. கோடியில்)	மத்திய அரசின் பங்கீடு (ரூ. கோடியில்)	மாநில அரசின் பங்கீடு (ரூ. கோடியில்)
1.	திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 100 எண்ணிக்கைகள் மின்கல வாகனங்கள் **(BOV)**	1.80	0.90	0.90
2.	திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 40 எண்ணிக்கைகள் இலகுரக வாகனங்கள் **(LCV)** (TATA ACE – 2 க.மீ)	2.34	1.17	1.17
3.	மண்துகளை அகற்றி தன்னுள் சேகரித்துக்கொள்ளும் வசதி உடைய (6க.மீ கொள்ளளவு) நவீன சாலை சுத்தம் செய்யும் வாகனம் 2 எண்ணிக்கையுடன் ஒரு வருட காலத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி (Mechanical Road Sweeping Machine)	1.76	0.88	0.88
	மொத்தம்	**5.9**	**2.95**	**2.95**

மேற்படி வாகனங்கள் வாங்கிட பெறப்பட்ட நிர்வாக அனுமதியில் ஒப்பந்தப்புள்ளி கோரும் முன் ஒப்பந்தப்புள்ளி வரைவின் தொழில்நுட்ப அனுமதியினை (Technical Clearance) தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் பெற்றிட அறிவுறுத்தி மேற்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வாகனங்கள் வாங்கிட உரிய ஒப்பந்தப்புள்ளி ஆவணம் தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி (Technical Clearance) பெற்றிட, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் சமர்பிக்கப்பட்டது. சமர்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் வ.எண்.2 மற்றும் 3 ன் படி ஒப்பந்தப்புள்ளி ஆவணம் தலைமை பொறியாளரால் அனுமதி அளிக்கப்பட்டு, வ.எண்.1-ல் கண்டுள்ள மின்கல வாகனத்திற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 10th State High Powered Committee-யில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள (Battery Operated Vehicle with Lithium Ion battery) மின்கல வாகனம் அதற்கான விவரக் குறியீடுப்படி (Specification) திருத்திய கருத்துரு சமர்பிக்க 29.01.2020ம் தேதிய அறிவுரையின் படி தற்பொழுது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு தேவையான 100 எண்கள் (Battery Operated Vehicle with Lithium Ion battery) மின்கல வாகனங்கள் வாங்கிட, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுமதித்துள்ளதன் படி ரூ.220.00 லட்சத்திற்கு (வாகனம் ஒன்றிற்கு 2.20 லட்சம் வீதம்) திருத்திய மதிப்பீடு மற்றும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணம் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நிர்வாக அனுமதி மற்றும் தலைமை பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical Clearance) வேண்டி தனி அலுவலர் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 100 எண்ணிக்கைகள் (Battery Operated Vehicle with Lithium Ion battery) மின்கல வாகனங்கள் ரூ.220.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிக் கொள்ள அனுமதிக்கலாம்.
2. 100 எண்ணிக்கைகள் (Battery Operated Vehicle with Lithium Ion battery) மின்கல வாகனங்கள் வாங்கிட தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி (Technical Clearance) பெற்றிட அனுமதிக்கலாம்.

3. இப்பணிக்கு தேவையான நிதியினை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு திருத்திய கருத்துரு அனுப்ப அனுமதி அளிக்கலாம்.

இ5/643/2019(மையம்)

தீர்மானம் எண்.28 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 4

திருச்சிராப்பள்ளி மாநகரரட்சி, தலைமை நீர்ப்பணி நிலையம், கம்பரசம்பேட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் மின்மோட்டர் மற்றும் கருவிகளை மாற்றி வைத்தல் தொடர்பான பணிகளில் 2016–2017ம் ஆண்டு தணிக்கை பத்தி எண்.43ல் பணி மேற்கொண்டது தொடர்பாக மதிப்பு கூட்டுவரி 5% பிடித்தம் செய்வதற்கு பதிலாக குறைவாக பிடித்தம் செய்ததால் ரூ.5,37,455 இழப்பாக கருதி தணிக்கை பத்தி எழுப்பப்பட்டு உள்ளது. பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட விபரங்களை கீழ்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்.	பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்
1	2	3	4	5	8
1	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – கம்பரசம்பேட்டை தலைமை நீரேற்று நிலையம் 300 குதிரை திறன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் 2 எண்கள் மாற்றியமைத்திடுவது மற்றும் 1000 கேவிஏ மின்மாற்றியுடன் தொடர்புடைய கருவிகளை மாற்றியமைத்தல் தொடர்பாக இ4/1421/2012/மையம்	M/S அல்கெம் இண்டஸ்ரிஸ் கோயம்புத்தூர் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 144/2011–12, நாள்.10.04.2012. மதிப்பீடு ரூ.1.85 கோடி	11.10.2012	46,411	தொகுப்பு – 5 பக்கம் எண் – 37 வ.எண் – 500
			23.11.2012	98,977	தொகுப்பு – 5 பக்கம் எண் – 46 வ.எண் – 638
			01.03.2013	1,22,967	தொகுப்பு – 5 பக்கம் எண் – 64 வ.எண் – 883
			13.06.2013	1,29,515	தொகுப்பு – 6 பக்கம் எண் – 16 வ.எண் – 177
			25.09.2013	1,38,160	தொகுப்பு – 6 பக்கம் எண் – 31 வ.எண் – 369
			03.06.2016	1,425	தொகுப்பு – Arear பக்கம் எண்–volume-I வ.எண் – p.n 7/17
மொத்தம்				**5,37,455**	

மேற்கண்ட பணிக்கு பிடித்தம் செய்யப்பட வேண்டிய இழப்பீடான (குறைவாக கட்டப்பட்ட) மதிப்பு கூட்டுவரி தொகையினை தனது வைப்பு தொகை மற்றும் காப்பு தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள ஒப்பந்ததாரர் M/s.அல்கெம் இண்டஸ்ட்ரிஸ் கம்பெனி தனது ஒப்புதலின் 23.01.2020ந்தேதிய கடிதத்தில் எழுத்து பூர்வமாக கொடுத்துள்ளது.

மேற்கண்ட ஒப்பந்ததாரது பட்டியலில் பிடித்தம் செய்து வைக்கப்பட்டுள்ள காப்பு தொகை மற்றும் வைப்புத் தொகையிலிருந்து தணிக்கை தடையில் சுட்டிக்காட்டப்பட்ட ரூ.5,37,455/–யை சமன் செய்து கொள்ள தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.5,37,455/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) பிடித்தம் செய்து கொள்ள ஒப்புதல் அளிக்கலாம்.

இ4/824/2020(மை)

தீர்மானம் எண்.29 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2019-20ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19.11.19 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.322/2019-20) வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	வேலையின் விபரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்		குறிப்பு
		ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்)	ஒப்பந்த சதவீதம்	
1	2	3	4	5
	பொதுநிதி 2019-20			
1	அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 7க்குட்பட்ட விஸ்வாஸ் நகர் பகுதியில் பல்நோக்கு சமுதாயக் கூடம் கட்டும் பணி. மதிப்பீடு ரூ.29.40 லட்சம்	ஜி.விஜயகுமார், திருச்சி டி.ராமநாதன், திருச்சி	0.13% குறைவு 0.75% அதிகம்	பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.ஜி.விஜயகுமார், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.13 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

[இ3/4493/2019]

தீர்மானம் எண்.30 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

(ஒப்பம்) – சு. சிவசுப்பிரமணியன்,
தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.